# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

## Sessions Case No. 58/2013

Deposition of witness for : PW2

Name : பாப்பாத்தி

Father's / Husband Name : கணேசன்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 21st day of October 2024.

**முதல் விசாரணை:-**

நான் ஜான்சன் பேட்டையில் குடியிருந்து வருகிறேன். பொது சுகாதாரத் துறையில் சுகாதார மேற்பார்வையாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று விட்டேன். இறந்து போன செந்தில்வேல் எனது மகன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 22.01.2011 அன்று இரவு 7.00 மணிக்கு மேல் என் வீட்டில் நான், எனது மருமகள், என் மகன் ஆகியோர் இருந்தோம். எனது மகன் ஸ்டவ் பின் வாங்குவதற்கு வெளியில் சென்றுவிட்டு வீட்டிற்கு வந்தார். ஸ்டவ்வை சரி செய்து கொடுத்தார். என் மகனுக்கு போன் வந்தது. என் மகன்

பேசிக்கொண்டிருந்தார். சிக்கந்தர் தொலைபேசியில் உன் ஆயா உன்னை ஒருத்தருக்கு பெற்றிருந்தால் இங்கே வா என்று என் மகன் என்னிடம் சொன்னார். நான் ஏன் அப்படி சொல்கிறான் என்று கேட்டேன். அதற்கு அவர் தெரியவில்லை என்று சொன்னார். பின்னால் பைக் இருந்தது. பைக்கை எடுத்துக் கொண்டு வேகமாக இட்டேரி ரோட்டில் என் மகன் சென்றார். எனது மகள் லதா வெளியில் வந்தார். பூனை எதிரில் குறுக்கால் வந்ததால் மறுபடியும் வீட்டிற்குள் வந்து தண்ணீர் வாங்கி குடித்துவிட்டு சென்றார். என் மகள் முதலில் ஓடினார். அதன் பின்பு நானும், என் மருமகளும் நடந்து சென்றோம். மூன்று பேர் பைக்கில் போனார்கள். அவர்கள் முகத்தை நான் பார்க்கவில்லை. ஆனால் அவர்கள் இன்று நீதிமன்றத்தில் உள்ளார்கள். ஒருவர் மட்டும் திரும்பி பார்த்தார். அவர் சிக்கந்தர். மற்ற இருவரின் முகத்தை நான் பார்க்கவில்லை. பொது கழிப்பறையில் பிரச்சனை நடப்பதாக சொன்னார்கள். நாங்கள் அங்கு போனோம். நாங்கள் போனபோது நீதிமன்றத்தில் உள்ள அனைவரும் கையில் ஆயுதங்களை வைத்துக் கொண்டு வெளியில் வந்தார்கள். அவர்கள் கையில் கத்தி மற்றும் கட்டை வைத்திருந்தார்கள். நாங்கள் போனபோது வந்தவர்கள் கத்தி மற்றும் கட்டையுடன் வெளியில் கிழம்பினார்கள். என் மகன் கீழே கிடந்தார். ரத்தமாக கிடந்தது. என் மகள் தாடையை பிடித்துக்கொண்டு நின்று கொண்டிருந்தார். மற்றவர்கள் வண்டியில் ஏறிவிட்டார்கள். எனது மகனுக்கு கன்னத்தில் காயம் ஏற்பட்டிருந்தது. அதை பார்த்தவுடன் எனக்கு மயக்கம் ஏற்பட்டுவிட்டது. அவ்வளவு தான் எனக்கு தெரியும். காலை வந்து அது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>1, 6 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் நீண்ட நேரம் மயக்கத்தில் இருந்தேன். அங்கிருந்த போலிசார் வந்து

என்னை மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை. மயக்கம் தெளிந்து நான் பார்த்தபோது நான் வீட்டில் இருந்தேன். என் மகனை யார் எப்போது, மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. இட்டேரி ரோட்டில் இருந்து பார்த்தால் வலதுபுறம் திரும்பி நேராக சென்றால் கன்னங்குறிச்சி ரோடு தெரியும் என்று சொன்னால் ஆமாம். இட்டேரி ரோடு அகலமான ரோடு. இட்டேரி ரோட்டில் நான் வந்த போது என் மகன் வெட்டுபட்டுக் கிடக்கிறார் என்று சொன்ன நபர் யார் என்று எனக்கு தற்போது நியாபகம் இல்லை. 14 வருடங்கள் ஆகிறது. போலிசாரிடம் நான் எந்த எதிரிகளையும் அடையாளம் காட்டவில்லை. போலிசாரிடம் நான் எத்தனை கையெழுத்து போட்டுக்கொடுத்தேன் என்று எனக்கு நியாபகம் இல்லை. போலிசாரிடம் யாரெல்லாம் வந்தார்கள் என்று சொன்னேன். அதை போலிசார் எழுதிக்கொண்டார்கள். அந்த ஆவணத்தில் தான் நான் கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். சம்பவ சமயத்தில் அ.சா–1 ன் கணவர் அவரது வீட்டில் இருந்திருப்பார். அ.சா–1ம், அவரது கணவர் முருகனும் திருமணம் ஆகி தனியாக குடித்தனம் நடத்துகிறார்கள். சம்பவ சமயத்தில் அ.சா–1க்கு ஒரு மகன் மட்டும் இருந்தார். அவருக்கு வயது 7. என்னுடைய வீட்டில் யாரெல்லாம் குடியிருந்தார்கள் என்ற விவரத்தை கேட்டு போலிசார் ஆவணம் எதுவும் என்னிடம் பெறவில்லை. நான் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்கள் சொன்னபடி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>7 மற்றும் 11ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

7 மற்றும் 11 எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டு அது பதிவு செய்யப்பட்டது.

**2 மற்றும் 4 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சுமார் இரவு 7.00 மணிக்கு என் வீட்டில் என் மகன் இருந்தார். நான் மேற்கு தெருவிற்கு போய் பார்த்த போது ஜனங்கள் கூட்டமாக பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்திற்கு போலிஸ் வந்ததை நான் பார்க்கவில்லை. சம்பவ இடத்தில் எனது மகனை பார்த்தவுடன் நான் மயங்கிவிட்டேன். அதன் பிறகு சம்பவ இடத்தில் இருந்து வந்துவிட்டேன். என் மகள் சம்பவ இடத்திலிருந்து எங்கு சென்றார், என்ன ஆனது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் அவர் மாமனார் வந்து அழைத்து சென்றதாக சொன்னார்கள். மறுநாள் போய் என் மகளை அரசு மருத்துவமனையில் பார்த்தேன். பிரேத பரிசோதனை செய்த போது நான் அரசு மருத்துவமனை சென்றேன். மருத்துவமனையில் என் மகள் பற்றி விசாரித்தேன். அப்போது தான் என் மகள் அரசு மருத்துவமனையில் இருக்கும் விவரம் எனக்கு தெரிந்தது. என் மகனின் பிரேத பரிசோதனை மாலையில் முடிந்தது. என் மகன் பைக் வைத்திருந்தது பற்றியும், மோதிரம் அணிந்திருந்தது பற்றியும், கையில் போன் வைத்திருந்தது பற்றியும் நான் போலிசாரிடம் சொன்னேன். இன்று வரை அந்த பொருட்களை போலிசார் கொடுக்கவும் இல்லை, காண்பிக்கவும் இல்லை. நான் சொல்வது போல் அப்படி ஒரு நிகழ்ச்சி நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எனது மகனை போய் பார்த்ததாக போலிசார் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் எனக்கு தெரியும் என்று போலிசார் சொல்லிக்கொடுத்து தான் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**3 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சொல்வது போல் அப்படி ஒரு நிகழ்ச்சி நடைபெறவில்லை என்று

சொன்னால் சரியல்ல. நான் எனது மகனை போய் பார்த்ததாக போலிசார் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் எனக்கு தெரியும் என்று போலிசார் சொல்லிக்கொடுத்து தான் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**8 முதல் 10 மற்றும் 14 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்போது சொல்லியுள்ள விவரங்களை தான் புலன் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். என் மகனை ஆம்புலன்ஸில் ஏற்றி சென்றபோது நான் உடன் செல்லவில்லை. நான் மயங்கியவுடன் என்னை வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டார்கள். மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து செல்லவில்லை. பிரேத பரிசோதனை முடிந்து பிரேதம் வீட்டிற்கு வருவதற்கு மாலை சுமார் 3.00 மணி ஆகிவிட்டது. அரசு மருத்துவமனையில் என் மகன் என்னென்ன பொருட்கள் வைத்திருந்தார் என்பதற்கு என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். பிரேதத்தை அரசு மருத்துவமனையில் கையெழுத்து போட்டு பெற்றுக்கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது.

ஒம்/– L. கலைவாணி
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.